ஆனால் உள்ளூர் வட்டத்திற்குள்ளே தங்களுடைய குடும்பத்திற்கு வந்து சாப்பிடவோ மற்ற காரியங்களோ செய்யமுடியாமல் தொடர்ச்சியாக பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மிகக் குறைவான தொகை கொடுக்கப்பட்டு வருவதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மையா? அப்படியானால் அதை உயர்த்து வதற்கு ஏதாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே அது உண்மையா, அல்லவா என்று தெரியாத நிலையிலேதான் கேள்வி எழுப்பி இருக்கிறார். நானும் அது உண்மையா, அல்லவா என்பதைப் பிறகு அறிந்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 5323 மற்றும் 7682 ஆகியவை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் தள்ளி வைக்கப்படுகின்றன.

நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்களுக்கு வரி.

*409 திரு. கே. ஏ. மணி:

மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுககு விடையளிப்பாரா:

(அ) நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (U.D.R.) அளவு செய்யப்பட்ட நிலங்களுக்கு எந்த அடிப்படையில் வரி விதிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இந்த வரி தள்ளுபடி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது வரியல்ல. நில அளவைக் கூலி, கற்கள் கிரயம், நிர்வாகச் செலவுகள் போன்ற எல்லா திட்டச் செலவுகளையும் சேர்த்து அதில் ஒரு பகுதி மட்டும் நில உரிமையாளர்களிடம் இருந்து கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இது மொத்தச் செலவில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு ஆகும். பொதுவாக இது நஞ்சை நிலத்துக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 58.70 என்ற நிலையிலும் புஞ்சை நிலத்துக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு சுமார் 29.60 என்ற நிலையிலும் இருக்கும். வட்டத்துக்கு வட்டம் கட்டண விகிதம் சற்றே மாறுபடலாம்.

(ஆ) இக்கட்டணம் வசூலிப்பதைத் தள்ளுபடி செய்ய இயலாது.

9.10 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்கீழ் எல்லா நிலங்களுக்கும்

நில அளவைப் பணியை மேற்கொண்டு வருகிறார்கள். நிலச் சுவான்தார்களுடைய நிலங்கள், கோயில் நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், ஹைவேஸ் நிலங்கள் இவற்றை எல்லாம் அளக்கும் போது நில உரிமையாளர்களுக்கு மட்டும் வரி விதிப்பு செய்கிறார்கள். அவர்களுக்கு வரி தள்ளுபடி செய்ய இயலாது என்று இங்கே தெரிவித்தார்கள். அத்துடன் நஞ்சை என்றால் ரூபாய் 58.70 என்றும், புஞ்சை என்றால் ரூபாய் 29.60 என்றும் கட்டண விகிதம் இருப்பதாகவும் இங்கே தெரிவித்தார்கள். ஒரு ஹெக்டேருக்கு அளக்கும்போது ஏற்படுகிற செலவு நஞ்சை என்றாலும் புஞ்சை என்றாலும் ஒரே அளவுதானே இருக்க முடியும். அப்படி இருக்கும்போது நஞ்சைக்கு ஒரு ரேட்டும், புஞ்சைக்கு ஒரு ரேட்டும் ஏன் வித்தியாசமாக வசூலிக்கப் படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உடமைப் பதிவு மேம் பாட்டுத் திட்டத்தின்கீழ் பூமியில் நடப்படும் நில அளவை குறியீட்டுக் கற்கள் வாங்குதல், அவற்றை சேமித்து வைத்தல் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய இதர செலவினங்களுக்கான தொகை மற்றும் நில அளவைக் கூலி ஆகியவை மட்டும் ஒரு வட்டத்திற்கான விஸ்தீரணத்திற்கு ஏற்ப கணக்கிட்டு அத்துடன் உபரிக் கட்டணமாக, சர்சார்ஜாக, 300 விழுக்காடு சேர்த்து பட்டாதாரர்களிடம் ஒரேஒரு முறைதான் வசூல் செய்யப் படுகிறது. மேலும் நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள், நிர்வாகச் செலவு தவிர, நில அளவைக் கட்டணம் கணக்கிடச் சேர்த்துக் கொண்டால், ஒரு எக்டேர் நஞ்சைக்கு ரூ. 261.60-ம், அளவு கூலி சுமாராக ரூ. 65.40-ம், உபரிக் கட்டணம் ரூ. 196.20-ம், 1:3 என்ற விகிதாச்சாரத்திலும், புஞ்சைக்கு ஒரு எக்டேருக்கு ரூ. 174.40-ம், அளவு கூலி ரூ. 43.60-ம், உபரிக் கட்டணம் ரூ. 130.80-ம், 1:3 என்ற விகிதாசாரத்திலும், வசூல் செய்ய வேண்டும். ஆனால், அனைத்து பணியாளர்களின் நிர்வாகச் செலவுகள் போன்ற வற்றை அரசே ஏற்றுக்கொண்டு, அளவுக் கூலி மற்றும் கல் கிரயத்துடன் உபரிக் கட்டணம் மட்டும் சேர்த்து பட்டாதாரர் களிடம் நில அளவைக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. இக்கட்டணம் நஞ்சையாக இருந்தால் ஒரு எக்டேருக்கு சுமார் ரூ. 58.20, அளவு கூலி ரூ. 14.55, உபரிக் கட்டணம் ரூ. 43.65, ஆக 1:3 என்ற விகிதாசாரத்திலும், புஞ்சையாக இருந்தால் சுமார் ரூ. 38.80, அளவு கூலி ரூ. 9.20, உபரிக்கட்டணம் ரூ. 29.60 என்ற விகிதாசாரத்திலும் வசூல் செய்யக் கணக்கிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 2]

திரு. எம். சிரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அளவை செய்யப்பட்டிருக்கும்படியான பல்வேறு கிராமங்களில் நில அளவைக்குப் பின் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து வேறு நபர்களுக்கு பட்டா மாற்றப்பட்டிருக்கிறதாக அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா? அப்படியானால் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் புகார் ஏதும் வரவில்லை. வந்தால் அரசு பரிசீலிக்கும்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டணம் முன் கூட்டியே வசூலிக்கப்படுகிறதா? அல்லது இந்தக் கட்டணத்தில் நிலுவை இருக்கிறதா? அப்படி நிலுவை அல்லது பாக்கி இருப்பின், அதை வசூல் செய்ய எடுக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவை இருப்பதாக எனக்கு நினைவு இல்லை. இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் தெரிவிப்பாரேயானால் அதுகுறித்து யோசிக்கப்படும்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் நன்செய், புன்செய் நிலங்களுக்கு ஒரே அளவு கட்டணமா அல்லது வேறுபாடு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பதிலில், ஏற்கெனவே வேறுபாடு உண்டு என்று தெரிவித்திருக்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூ.டி.ஆர். திட்டத்தின்கீழ் நில அளவை செய்யப்பட்டதில், சில சமயங்களில் அது சரியாக செய்யப்படவில்லை. அதனால் வரிகள் கொடுப்பதற்குச் சங்கடப்படுகிறார்கள். மேலும் நிலங்கள் சரியாக அளக்கப்படவில்லை. கல் சரியாக நாட்டப்படவில்லை. வரைபடங்களிலிருந்து மட்டும் மாற்றம் செய்திருக்கிறார்கள். நேரடியாக நிலங்களுக்குச் சென்று பார்த்து அதைச் செய்யவில்லை. இதனால் சில ஊர்களில் இருக்கிற நில உடைமையாளர்கள் இன்றையதினம் பணத்தைத் திருப்பித் தருவதிலே சங்கடப்படும் நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

Hon. Thiru NANJIL K. MANOHARAN; Sir, let the Member talk personally.